**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.491 of 2021**

PW-1

| Name | லதா(PW1) | Calling | காவல் ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's Name | சேதுராமசாமி | | |
| Village | திருமுருகன்பூண்டி காவல் நிலையம் | | |
| Taluk | அவிநாசி | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th **day of July 2026** by K.Kulanthiavel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது திருமுருகன்பூண்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இவ்வழக்கில் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 01.05.2019 ஆம் தேதி முதல் நிலைக் காவலர் சுரேஷ்குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது நிலையம் ஆஜராகி சுஸ்மிதா ஸ்ரீ கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்362/19 சட்டப்பிரிவுகள் 294(b), 506(ii) of IPC and 4 of TNPHW act ன்–கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வழக்கு கோப்பை ஆய்வாளர் முனியம்மாள் அவர்களின் புலன் விசாரணைக்காக வைத்தார். **புகார் அ.சா.ஆ.1 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**

அன்றைய தினமே ஆய்வாளர் முனியம்மாள் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சதீஷ்குமார், சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரித்து தனித்தனியே

வாக்குமூலங்கள் தயார் செய்துள்ளார். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை கடந்த 02.05.2019 ம் தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 506(ii) of IPC and 4 of TNPHW act ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதா என்றால் சரியல்ல, சம்பவ இடத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது.

**மறுவிசாரணை:– இல்லை.**

| | |
|---|---|
| | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |